ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
திகதி 2024.04.03

# வளம்பெறத்தக்க வியாபாரங்கள் புத்துயிர் பெறுவதற்கு ஆதரவளிப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகளில் வியாபார புத்துயிரளித்தல் பிரிவுகளைத் தாபிப்பதற்காக மத்திய வங்கி வழிகாட்டல்களை வழங்குகின்றது

ஏற்கனவே தாபிக்கப்பட்ட கொவிட்-19 நோய்த்தொற்றுக்குப் பிந்திய புத்துயிரளித்தல் பிரிவுகளின் தொழிற்பாடுகளை மேலும் வலுப்படுத்தி, அத்தகைய பிரிவுகளை **வியாபார புத்துயிரளித்தல் பிரிவுகள்** ஆக வடிவமைப்பதற்கு இலங்கை மத்திய வங்கி 2024 மாச்சு 28 அன்று உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விரிவான வழிகாட்டலை வழங்கியுள்ளது. முன்மொழியப்பட்ட வியாபார புத்துயிரளித்தல் பிரிவுகளின் மேம்படுத்தப்பட்ட நோக்கெல்லையானது அசாதாரண பேரண்டப்பொருளாதார நிலைமைகளால் பாதிக்கப்பட்ட வளம்பெறத்தக்க வியாபாரங்களுக்கென நிலைபேறான புத்துயிரளித்தலை வசதிப்படுத்தி உரிமம்பெற்ற வங்கிகளின் அதிகரித்த சேதமிழந்த சொத்துக்களை முறையாகக் கையாளுவதை உறுதிசெய்யும். இவ்வழிகாட்டல்களை வகுக்கின்றபோது மத்திய வங்கியானது வங்கித் தொழில்துறை மற்றும் வர்த்தக சம்மேளனம் அடங்கலாக தொடர்புடைய ஆர்வலர்களின் கருத்துக்களையும் கோரியது.

அண்மைய ஆண்டுகளில் நிலவிய சவால்மிக்க பேரண்டப்பொருளாதார நிலைமைகள் வியாபாரங்களின் வருமானம் ஈட்டுகின்ற செயற்பாடுகளை தடங்கல்களுக்குள்ளாக்குவதற்கு வழிவகுத்து தமது கடன்களை உரியவாறு செலுத்துவதற்கான கடன்பெறுநர்களின் இயலுமையை மோசமாகப் பாதித்தன. இதன்மூலம் உரிமம்பெற்ற வங்கிகளின் அறவீட்டுச் செயன்முறை சீர்குலைந்தது. ஆகையினால், புத்துயிர் பெறுவதற்கு அடிப்படையிலேயே வளம்பெறத்தக்கவையாகக் காணப்படுகின்ற வியாபாரங்களைக் கொணடுள்ள உரிமம்பெற்ற வங்கிகளின் செயலாற்றுகின்ற மற்றும் செயலாற்றமற்ற இருவகையான கடன்பெறுநர்களுக்கும் உதவுவதற்கு வியாபார புத்துயிரளித்தல் பிரிவுகளை நிறுவுவது மிக முக்கியமானதாகக் கருதப்பட்டது.

**வியாபார புத்துயிரளித்தல் பிரிவுகளின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:**

அ. வியாபாரங்களின் புத்துயிரளித்தலுக்கு ஆதரவளிப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் **ஆற்றல்வாய்ந்த வியாபார புத்துயிரளித்தல் மற்றும் புனரமைப்புக் கொள்கைகளையும் நடைமுறைகளையும்** கொண்டிருப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் வேண்டப்பட்டுள்ளன.

ஆ. பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களின் வியாபாரங்களுக்கு மிகவும் செயல்திறனுடனும் வினைத்திறனுடனும் ஆதரவளிக்கும் பொருட்டு 50 இற்கும் மேற்பட்ட கிளைகளுடன்கூடிய பாரிய வங்கிகள், **அவற்றின் பாரிய கிளைகளில்/ பிராந்திய அலுவலகளில் வியாபார புத்துயிரளித்தல் பிரிவுகளை** தாபிப்பதை பரிசீலனையில்கொள்ளலாம்.

இ. வியாபாரமொன்று **அடிப்படையில் வளம்பெறக்கூடிய தன்மையானது** உரிமம்பெற்ற வங்கியொன்றின் மூலம் வியாபார புத்துயிரளித்தலை பரிசீலனையில் கொள்வதற்கான

முக்கிய காரணியாகும். வளம்பெறத்தக்க தன்மைபற்றி மதிப்பிடுகின்ற போது நிதிசார் மற்றும் நிதிசார குறிகாட்டிகள் இரண்டும் கருத்திற்கொள்ளப்படுகின்றன.

ஈ. அழுத்தத்திற்குள்ளான வியாபாரமொன்றின் புத்துயிரளித்தல் செயன்முறைக்காக **கடன்பெறுநரின் தொடர்ச்சியான ஒத்துழைப்பு முக்கியமானதாக அமைந்திருக்கும்.**

உ. **நிதியியல் மற்றும் தொழிற்பாட்டு மறுசீரமைப்புக் கருவிகள் மற்றும் செயன்முறைகள் இரண்டின்** ஊடாகவும் வியாபாரம் புத்துயிரளிக்கப்படலாம். பொருத்தமான புத்துயிரளித்தல் கருவித் தொகுதியைத் தேர்ந்தெடுத்தலானது புத்துயிரளித்தல் செயன்முறையில் ஈடுபடுகின்ற தரப்பினர்களின் பரஸ்பர உடன்பாட்டிற்கு உட்பட்டதாகும்.

ஊ. பல வங்கிகளிலும் நிலுவையாகவுள்ள கடன்வசதிகளைக் கொண்ட நிறுவனக் கடன்பெறுநர்கள், அவர்கள் எதிர்கொண்டுள்ள நிதியியல் அத்துடன்/ அல்லது வியாபார அழுத்தங்களைத் தீர்ப்பதற்கு **நீதிமன்ற தலையீடின்றி தன்னார்வமாகவும் பரஸ்பரம் இணங்கக்கூடிய அடிப்படையிலும் "நிறுவன செயற்பாட்டுக் கட்டமைப்பு"** பற்றி உடன்படலாம். இந்நோக்கத்திற்காக "நிறுவனம்" என்பது கணக்காய்வுசெய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களின் பிரகாரம் ரூ.1 பில்லியனுக்கு மேற்பட்ட வருடாந்த புரள்வுடன்கூடிய அல்லது உரிமம்பெற்ற வங்கிகளால் வழங்கப்படும் ரூ.250 மில்லியனுக்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட திரட்டிய நிலுவையாகவிருக்கும் கடன் வசதிகளுடன் கூடிய வியாபாரமொன்று என வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது.

எ. 2024 மே நடுப்பகுதியளவில் வியாபார புத்துயிரளித்தல் பிரிவுகளைத் தாபிக்குமாறும் 2024 யூலை 01 அளவில் சுற்றறிக்கையின் தேவைப்படுத்தல்களுடன் முழுமையாக இணங்கியிருக்குமாறும் உரிமம்பெற்ற வங்கிகள் வேண்டப்பட்டுள்ளன.

மேம்பட்ட பொருளாதார நடவடிக்கைகளை ஏற்படுத்தி தேசியப் பொருளாதாரத்தின் அபிவிருத்திக்கு பங்களிக்கும் விதத்தில் கடன்பெறநரின் நலனுக்காக நிலைபேறான விதத்தில் வளம்பெறத்தக்க வியாபாரங்கள் புத்துயிர் பெறுவதை உறுதிசெய்வதற்கு ஆக்கபூர்வமான விதத்தில் ஒத்துழைக்குமாறு உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் தொடர்புடைய கடன்பெறுநர்கள் ஆகிய இருதரப்பினரையும் இலங்கை மத்திய வங்கி கோரியுள்ளது.

வியாபார புத்துயிரளித்தல் பற்றிய மேலதிக விபரங்களை "உரிமம்பெற்ற வங்கிகளில் வியாபார புத்துயிரளித்தல் பிரிவுகளைத் தாபித்தலுக்கான வழிகாட்டல்கள்" மீதான 2024ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க சுற்றறிக்கையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இது, பின்வரும் இணைப்பினூடாக அணுகப்படலாம்:

https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/bsd_circular_no_2_of_2024_e.pdf